# பெருமாள் முருகன் சிறுகதைகளில் வாழ்வியல் விழுமியங்கள்

# Perumal Murugan's Short Stories of Life Values

*முனைவர் ர. கண்ணன்*
உதவிப்பேராசிரியர்
ரத்தினவேல் சுப்பிரமணியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், இந்தியா

**Dr. R. Kannan**
*Assistant Professor*
*Ratnavel Subramaniam College of Arts and Sciences, Coimbatore, India*

## ஆய்வுச் சுருக்கம்

*இயற்கைப் படைப்பின் மணிமுடியாக விளங்குபவன் மனிதன். தனக்குரிய சிறப்புப் பண்புகளால் மனிதன் பிற விலங்குகளிலிருந்து வேறுபடுகிறான். அதற்கு அவனுடைய மனம் காரணமாக அமைகிறது. சமுதாய விலங்காகிய மனிதன் பிற மனிதர்களோடு கலந்து வாழும் போது தன்னலத்தைப் புறக்கணித்துப் பொது நலத்தைப் பேணவேண்டியவனாகின்றான் இதற்குச் சில பண்புகள் அடிப்படையாக அமைகின்றன. அன்பு, அருள், வாய்மை, தூய்மை, ஒப்புரவு, கண்ணோட்டம், ஈகை. நாணம் முதலிய பண்புகள் அனைத்தும் மனிதன் பிறரோடு கொள்ளும் உறவுகளுக்கு அடிப்படையாக அமைகிறது. இப்பண்புகள் மனித இனத்தோடு மட்டும் நில்லாது உயிரினங்கள் அனைத்தையும் தழுவி நிற்கும். இது மிக உயர்ந்த மனிதப்பண்பாக அமைகிறது.*

*தமிழரின் நாகரிகம், பண்பாடு இரண்டும் அவர்களது செம்மாந்த வாழ்வைப் பிரதிபலிக்கின்றன. சங்க காலத்தில் மக்கள் உருவாக்கிய சமூகப் பழக்கம், வழக்கம், நம்பிக்கை. சமயம் முதலியன பண்பாடு என்னும் விழுமியமாக மலர்ந்தது. அவ்விழுமியம் காலந்தோறும் வளர்ச்சி கண்டு வந்துள்ளது. சங்ககால முதல் மக்கள் பின்பற்றி வந்த வாழ்வியல் விழுமியங்களை பெருமாள் முருகன் தம கதைகளில் பதிவு செய்துள்ளதை எடுத்துரைக்கும் நோக்கில் பெருமாள் முருகன் சிறுகதைகளில் வாழ்வியல் விழுமியங்கள் என்னும் கட்டுரை அமைகிறது.*

**திறவுச் சொற்கள்**: *முன்னுரை, விழுமியம் விளக்கம், வேளாண்மை விழுமியங்கள், தனிமனித விழுமியங்கள், விருந்தோம்பல் விழுமியங்கள், காட்சி நம்பிக்கை விழுமியங்கள்*

## Abstract

*Man is the pearl of nature. Man is distinguished from other animals by his special characteristics. His mind is responsible for that. As a social animal, man has to ignore selfishness and maintain the common good when he lives with other people. It is based on certain properties. Love, grace, wisdom, purity, reconciliation, perspective, kindness. All the characteristics like nanam form the basis of human relations with others. These traits are not limited to humans but to all living beings. This constitutes the highest human quality. Civilization and culture of Tamils both reflect their luxurious life. The social habits, customs and beliefs developed by the people during the Sangam period. Religion etc. flourished as culture. The growth has seen growth from time to time. The article Perumal Murugan's Short Stories of Life Value is written with the aim of presenting the life values that have been followed by the people since the Sangam period.*

**Citation**

Kannan, R. "Perumal Murugan's Short Stories of Life Values." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 2, 2024, pp. 32–39.

**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20069332*

**விழுமியம் - விளக்கம்**

*"விழுமியம்" என்ற சொல் நுட்பமான பொருளுடையது. அச்சொல்லிற்கான மூலத்தை முதலில் குறிப்பிடுவது தேவையாகிறது. சரோஜினி அவர்கள் அதற்கான மூலத்தை, தகுதி என்ற பொருளைத் தருகின்ற "Valiar" என்ற பிரெஞ்சு மொழிச் சொல்லும், ஒழுக்கம் என்ற பொருளைத் தருகின்ற "Valarie" என்ற இலத்தீன் மொழிச் சொல்லும் இதன் மூலங்களாக அமைகின்றன! என்று குறிப்பிடுகிறார்.*

*விழுமியம் என்ற சொல் தமிழ் நிகண்டு, அகராதிகளில் நேரடியாக இடம் பெறுவதில்லை, எனினும் விழு, விழுமிய, விழுப்பம், விழுமம் போன்ற சொற்கள் காணப்படுகின்றன.*

*இரா.பாலகிருஷ்ண முதலியார் எழுதிய தமிழ் ஆங்கில அகராதியில் விழுமிய என்ற*

***சொல்லுக்கு நன்றாகத் தெளியக் கூடிய () மிகச் சிறந்த மேம்பட்ட முதல் தரமான[2]***

*என்று குறிக்கப்பட்டுள்ளது என்று விளக்கம் தரப்பட்டுள்ளது.*

**விழுமியம் - அகராதிகள் தரும் விளக்கம்**

***விழுப்பம் - ஆசை, சிறப்பு, நன்மை, மேன்மை, உயர்வு***

***விழுப்பகை - பெரும்பகை***

***விழுப்பொருள் - மேன்மையான பொருள்***

***விழுமியம் - சிறப்பு, சீர்மை நன்மை, துக்கம், வருத்தம்[4]***

*என்று தமிழகராதி விளக்கம் அளித்துள்ளது.*

*விழுமியம் என்னும் சொல் தற்காலத்தில் "மதிப்பு" என்னும் சொல்லால் குறிக்கப்படுகின்றதைக் காணமுடிகின்றது. மதிப்புகள் பெரும்பாலும் மக்களின் சமூகச் சூழலை வெளிப்படுத்துவதோடு அவனது எண்ணங்கள், வெளிப்பாடுகள் ஆகியவற்றின் பிரதிபலிப்பாகவும் அமைந்துள்ளது.*

*சங்க காலத்தில் நிலைபேறுடைய மானிட மதிப்புகள் மேலோங்கியிருந்தன. சங்ககால மதிப்புகளை அறநிலை மதிப்புகள், பொருள் நிலை மதிப்புகள், இன்பநிலை மதிப்புகள், வீடுபேற்றுநிலை மதிப்புகள் என்று வகைப்படுத்துவர்.*

*சங்ககால வாழ்வுத்துறைகளின் அடிப்படையில் மக்கள் தம் மதிப்புகளை இல்லறத்தார்குரிய மதிப்புகள், துறவறத்தார்க்குரிய மதிப்புகள், அரசியல் மதிப்புகள், பொருளாதார மதிப்புகள், போர் நிலை மதிப்புகள் என்றும் வகைப்படுத்தியுள்ளனர்.கற்பு, காமம், ஒழுக்கம், பொறை, நிறை, விருந்து புறந்தருதல், சுற்றம் ஓம்பல் என்ற கிழவோள் மாண்புகளும், ஆடவர்க்குரிய வினையாகிய கடமையும் இல்லறத்தார்க்குரிய மதிப்புகள் என்றும், புலால் மறுத்தல், அவா அறுத்தல் உள்ளத்தூய்மை, தவம், நோன்பு, ஐயம் நீங்கித்தெளிதல் ஆகியவை துறவறத்தார்க்குரிய மதிப்புகள் என்றும், முறைசெய்து காப்பாற்றுவது, நடுவு நிலை நிற்றல், வண்மை போன்றவை அரசியல் மதிப்புகள் என்றும், "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே", "கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம் குறை கொடாது" போன்றவை பொருளாதார மதிப்புகள் என்றும் ஏ.கோ.பாஸ்கரதாஸ் அவர்கள் பகுத்துரைத்துள்ளதாக5 குறிப்பிடுவர்.*

**வேளாண்மை விழுமியங்கள்**

*கொங்குமண்டலத்தில் வேளாண்மைத் தொழில் முதன்மையானதாகுமம். மனிதனுக்கு உணவு அத்தியாவசியமான ஒன்று. உணவுத் தேவையை வேளாண்மை தன்னிறைவு செய்கிறது. எனவேதான் இறைவனுக்கு நிகராக வேளாண்மையை மக்கள் மதிக்கின்றனர்.*

இத்தகைய வேளாண்மைப் பண்பாட்டில், விழுமியங்கள் அமைந்துள்ளன. இதனடிப்படையில் பெருமாள் முருகனின் சிறுகதையில் இடம்பெற்றுள்ள வேளாண்மை விழுமியங்களைக் காணலாம்.

மாதொருபாகன் புதினத்தல், உயிர்களுக்கு அடிப்படை ஆதாரமாக உள்ள உணவும், நீரும் இல்லாமல் போகுமோ? என்ற மனவருத்தம் சார்ந்த விழுமியப் பண்பினை அறியலாகிறது. லேசாகக் கண்ணயர்ந்த காளி கிச்சத்தில் எறும்பின் கூடி உணர்ந்து விழித்தான். அனிச்சையாய்த் தேய்த்தபோது சிறுதடிப்பு ஏற்பட்டது. எழுந்து உட்கார்ந்தான். உள்ளே சமையலோசை கேட்டபடியிருந்தது. முத்து இன்னும் வந்திருக்கவில்லை. கொஞ்ச தூரம் நடந்துவிட்டு வரலாம் என்று நினைத்தான். வீடும் பூவரசும் தவிரச் சுற்றிலும் காடுகள் மொட்டையாய் வெயிலெரிக்கக் கிடந்தன. வைகாசி தொடங்கி இருபது நாட்களாகியும் இன்னும் வானம் கண் திறக்கவில்லை. புழுதி உழவு ஓட்ட மழையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வெயில்தான் அதிகமாகிறதே தவிர வானில் சிறு கருக்கலைக் கூடக் காணமுடியவில்லை. இந்த வருசம் மழை பொய்த்துப் போய்விடுமோ என மனதில் பயம் வந்தது.

மாடுகளுக்குத் தீனிப் பிரச்சினை இல்லை. கடலைக் கொடிப் போர் ஒன்றும் சோளத்தட்டுப் போர் ஒன்றும் இன்னும் முழுதாக இருக்கின்றன. தண்ணீர்ப் பிரச்சினை வந்துவிடலாம் கிணற்று நீரை நான்கு தென்னைகளுக்குக் கூடப் பாய்ச்சாமல் ஆடுமாடுகளுக்கு என்று

**வைத்துக்கொள்ள வேண்டும். எப்படியும் ஐப்பசி கார்த்திகையில் மழை பெய்யாமலா போய்விடும்**[6]

என்னும் சான்று வழி வேளாண்மை பருவகாலத்திற்கு ஏற்ப சிறப்பான முறையில் நடைபெற்றதை அறியலாம்.

கொங்குப் பகுதியில் குறிப்பாக நாமக்கல் வட்டாரப் பகுதிகளில் மேட்டாங் காடுகள் அதிகம். இதனால் வேளாண்மை வானம் பார்த்து செய்யப்படுகிறது. இவ்வேளாண்மையில் பெறப்படும் பொருட்கள், மக்களின் அடிப்படை வாழ்வாதாரமாக உள்ளது. இத்தகைய வேளாண்மை அறவழிபட்டதாக அமைந்துள்ளதைப் பின்வரும் சான்றுவழி எடுத்துக்காட்டலாம். அங்கு எல்லாமே மேட்டுக்காடுதான், வருசம் ஒரு வெள்ளமை அதுவும் வானம் கண் திறக்க வேண்டும்ஒரு வருசம் தவசங்களும், பயிறுகளுமாய் பானைகள் நிறையும். வருசம் தொழிலாளிகளுக்குக்கூட தருவதற்குப் படாதபாடுபடவேண்டும். என்னமோ இந்த

**ஆடுங்குட்டியும் மாடுங்கன்னும் பொழப்பே ஒரு வழியா ஓட்டுது என்பார்கள்''**[7]

என்பதிலிருந்து வேளாண்மையின் விழுமியப் பண்பை அறியலாம். அவற்றிலும், வேளாண்மைத்தொழில் செய்ய வேண்டியது மனிதனின் அடிப்படையான அறமாகக் கருதப்படுவதைக் கங்கணம் புதினம் வழி வெளிப்படுகிறது.

ஒரு மழை கனமாகக் கொட்டிவிட்டால், உடனே புழுதி உழவு தொடங்குவார்கள். இரண்டாம் மழைக்கு விதைப்பு,

**சவைகாசியில் கடலைக்காய் போட்டால்தான் சரியான பருவம்''**[8]

எனக் கணக்கு வைத்து உழவு வேலையைப் பிறருக்காகவும், தமக்காகவும் செய்துகொள்ளும் செயல்பாடு விழுமியம் சார்ந்து அமைந்துள்ளது. அதேவேளையில் உழவு செய்யாது இருப்பது சிறந்த அறமாக இருக்காது என்பதனை நல்ல வெள்ளாளன் மண்ணக்கொற போட்டு வெப்பானாடா9 என்ற கூற்றில் இருந்து வேளாண்மை செய்ய வேண்டியது அறமாக உள்ளதை அறியலாம்.

**தனிமனித விழுமியங்கள்**

*உலகில் சமூக வாழ்க்கை மனிதனை ஒன்றாக இணைக்கிறது. மனிதன் தனியாளாய் அலைந்து திரிந்த நாடோடி வாழ்கை வாழ்ந்நத போது எந்தவிதமான பண்பாடோ விழுமியமோ அவனிடம் இல்லை. இனக்குழு வாழ்க்கையில்-ஏற்பட்ட சமூக வாழ்வியலில் மனிதன் பண்ணபட்டவனாக மாறினான். இதனடிப்டபடையில் மனித சமூகம் அதனதன் வாழ்நிலைக்கு ஏற்ப பண்பாட்டு மரபுகளை வகுத்துக்கொண்டு காலந்தொறும் அப்பண்பாட்டு விழுமியங்களைத் தங்களது சந்ததிகளுக்கு வழங்கி வருகின்றது. அவ்வகையில் தனிமனிதன் ஒருவன் சமூகத்தின் விழுமியங்களைத் தனது முயற்சியின் மூலம் கற்றுக்கொள்கிறான். சமூகத்தின் மரபு நிலைகளுக்கு ஏற்ப தனது வாழ்வு அமையும் வணணம் பார்த்துக் கொள்கிறான். இதனால் தனிமனித விழுமியம் சமூகத்திற்கு உகந்ததாகவும், மாறுபட்டும் அமைவதைக் காணமுடிகிறது. அதனடிப்படையில் பெருமாள் முருகனின் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள தனிமனித விழுமியங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன.*

*“நுங்கு” சிறுகதையில் வரும் முருகேசனின் தந்தை தனி மனிதனாக இருந்த வாழ்க்கையின் பல பரிமானங்களையும், எதார்த்தங்களையும் அறிந்து வாழ்வை அதன் போக்கில் விடுத்து, வாழ்ந்து வரும் மனதராக கதை முழுவதும் படைக்கப்பட்டுள்ளார்.*

*தந்தையாக இருந்து மகனுக்குக் கற்றுத்தர வேண்டியவைகளைக் கற்றுக் கொடுத்து தோன்றத் துணையாக வாழ்ந்துள்ளார். முருகேசன் படிப்பறிவில்லா விட்டாலும், ஆடு மேய்ப்பதிலும், மரம் ஏறுபதிலும் திறமைசாலி. ஒருமுறை பனைமரம் ஏறி கீழே விழுந்து வார்த்தைகள் தனிமனித ஒழுக்கத்திற்கு சான்றாக அமைகிறது.*

*மெல்ல வாழ்ந்து எழுந்தவனுக்கு அழுகை வந்தது. உடலை அசைக்க, முடியவில்லை. அவனைத் தூக்கி நிற்க வைத்துக் கைகளையும், கால்களையும் உதறிக் காட்டச் சொன்னார். மெதுவாக என்றாலும் அசைக்க முடிந்தது. எங்கண்ணே உனக்கு ஒன்னும் இல்லடா, பூமாதேவி தாங்கிப் புடிச்சிக்கிட்டா, ஏதோ ஒரு தத்து மடியில் தாங்கிக் கொண்டு ஏதேதோ சொல்லிப் புலம்பினார். அப்பன். அவருக்கும் அழுகை வந்தது10 என்று தனிமனிதனாக இருந்து மகனுக்கு ஆறுதல் கூறும் வார்த்தைகள் விழுகியப் பண்பை உணர்த்தி நிற்கிறது.*

**விருந்தோம்பல் விழுமியங்கள்**

*தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் தனியிடம் பெறுகின்றது. இல்லறக் கடமைகளில் ஒன்றான திருமணம் நடைபெறுவதின் நோக்கமே விருந்தோம்பலாகும். விருந்தோம்பும் பண்பு உடையவர்கள் வறுமையில் வாடினாலும் அவர்கள் வாழ்வில் மேண்மையுடைவர்கள்.*

*விருந்தினர் என்பதற்குப் புதியவர் என்று பொருள் முன்பின் அறியாத புதியவர்களை (பசித்து வருபவர்களை) வரவேற்று உணவு கொடுத்து பசியாறச் செய்யும் செயலை தமிழர் போற்றி வந்தனர்.*

*விருந்தோம்பல் செய்வது ஆறறிவு உயிர்களுக்கு மட்டுமன்று தனக்கு உதவி செய்தவரை மறக்காது. நன்றி மறவா உள்ளத்தோடு விருந்து படைப்பது தமிழர் வழக்கம். பொருள் தேடச் சென்ற காதலரிடமிருந்து தூதுவராய் இளவேனில் வந்திருக்கிறது. இளவேனில் காலம் பொருள் தேட உகந்ததன்று. எனவே தலைவன் வரும் செய்தியோடு வந்த இளவேனிலுக்கு நாம் விருந்து வைப்போம் என்கிறாள் தோழி. இதனை,*

***இன்உயிர் செய்யும் மருந்தாகி காதலர் -***
***எயிறு ஏய்க்கும் தன்அருவி நறுமுல்லைப்***
***போது ஆரக் கொள்ளும் கமல் குரற்கு எண்ணும்***

**தூது வந்தன்றே, தோழி**

**துயர்அறு கிளவியோடு அயர்ந்தீகம் விருந்தே''**

என்ற பாடலில் நம் இனிய உயிரை வாழ்விக்கும் மருந்தினைப் போல, உன்னுடைய துயர் தீர்க்கும் இனிய மருந்து நம் காதலருடைய வருகை என்று சங்ககாலத்தில் விருந்தோம்பல் பண்பு போற்றப்பட்டதை அறிய முடிகிறது.

**வள்ளுவரும், விருந்தின் மேன்மையை,**

**செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**

**நல்விருந்து வானத் தவர்க்கு'[2]**

என்னும் குறளில் காட்டியுள்ளார்.

விருந்தோம்பல் என்பது தமிழரின் பழக்கமாகும். தொடக்ககாலம் முதல் விருந்தோம்பல் பண்பினைத் தமிழர்கள் கடைபிடித்து வருகின்றனர். அதிவீர ராமபாண்டியனின் வெற்றி வேற்கையில் விருந்தோம்பலின் சிறப்பினை,

**உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்'[3]**

என்கிறது. இவ்வாறாக பழந்தமிழ் இலக்கியங்கள் விருந்தோம்பல் பண்பினைப் புலப்படுத்தியுள்ளன. அதனடிப்படையில் பெருமாள் முருகனின் சிறுகதைகளில் காணலாம். விருந்தோம்பல் சார்ந்த விழுமியங்களைப் பின்வருமாறு எடுத்துரைக்கலாம்.

பெருமாள் முருகனின் மாலை நேரத் தேநீர் வறுகறி, மனாமுனி, வேட்கை, பசி, மாயம் போன்ற சிறுகதைகளில் வீட்டில் நடக்கும் உணவு பரிமாற்றங்களும், விருந்தோம்பலும் சுட்டப்பட்டுள்ளன.

''அபிசேகம்'' என்னும் சிறுகதையில் முருகேசு அரசு வேலையில் இருப்பவள். அவனுக்குத் திருமணமாகியிருந்தது. பெண் வீட்டார் உறவுகளுக்கு விருந்துக்காகச் சென்றனர்.

முதல் வாரச் சனிக்கிழமை அவள் பெரியம்மா வீட்டுக்குப் போனார்கள். விருந்தில் அவனுக்குப் பிடித்த மாதிரி நிறைய வகைகள் இருந்தன. விரும்பி வேகமாகச் சாப்பிட்டான். அவள் நாசுக்காக ஒவ்வொன்றையும்

**விரல்களில் பூப்போலத் தொட்டெழுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்'[4]**

என்று விருந்தினரின் உபசரிப்பைக் கதாசிரியர் பதிவு செய்துள்ளார்.

வாழ்வைத் தேடி வெளியூருக்குச் செல்கின்ற போது மக்கள் தங்கள் குலதெய்வங்களை அடிக்கடி நினைத்துக் கொள்வர். இது தன்மைக்பிக்கை, பாதுகாப்பு சார்ந்து அமைவதாகும்.

''உனக்கு என்ன பேனுமய்யா'' கதையில் கிராம மக்கள் தங்களுக்கு ஏதாவது நோய் வந்து விட்டால் அதனைத் தீர்த்து வைக்கும்படி கருப்பனாரிடம் முறையாருவர். அதே போல கதையில் வரும் பாவாத்தாலும் தனக்கு நல்லது செய்தால் கருப்பனாரின் கடனைத் தீர்ப்பதாக உறுதியளிக்கிறாள். மேலும் கதையின் முடிவில் கருப்பனர் மீது தான் கொண்ட பக்தியை ஊரார் முன்னிலையில் காட்டும் போது அனைவரும் மெய் சிலிர்த்து நிற்கின்றனர்.

இதனை,

இந்த முறை கருப்பனார் கடனை என் உயிரைக் கொடுத்தாவது தீர்ப்பேன் என்றாள். அவள் வளர்த்த தலையீத்து மூடு ஒரே ஒரு கிடாக்குட்டி போட்டிருந்தது. ஈரம் காயும் முன்னால் குட்டியை அப்படியே தூக்கிக் கொண்டு போய்க் கருப்பனாருக்கு முன்னால் போட்டு விட்டுச் சொன்னாள். அய்யா இது உன்னோடது. ஆரு என்ன சொன்னாலும் இது உனக்குத்தாய்யா. என்னால பதினாலு கெடா வெட்டி உனக்கு பலி போடச் சமுத்து இல்ல. காலம் போன கடைசில என்னய நிறுத்தி வெச்சுட்டு என்ன பண்ணுவான்னு வேடிக்க பாக்கற. எல்லாத்துக்கும் சேத்து இந்த ஒன்ன வளத்து உனக்கு வெட்டிர்றன. பொன்னு வைக்கற எடத்துல பூதான்.

***மன்னிப்புக் குடுத்து ஏத்துக்கோணும்***[15]

*என்று தன்னுடைய இறைநம்பிக்கையை வெளிப்படுத்தி நிற்கின்றாள் பாவாத்தாள்.*

*பாவாத்தாள் கருப்பனாருக்கு கெடாவெட்டு கொடுக்க சம்மதித்தவுடன் சாமியாடி மீது சாமி வந்து ஆடியது. அப்போது பாவாத்தாளின் கெடாய் துலுக்க மறுத்து விட்டது. அனைவரும் கெடாயைப் பார்த்துக் கொண்டிருக்க, சாமியாடி பாவாத்தாளை அழைத்து வர கட்டளையிடவே, மகனும், பேரனும் காட்டிற்குள் ஓடினர். இருவரும் கைத்தாங்களாக அழைத்து வர. அவள் முகத்தில் சடாரெனத் தெளிந்ததும் கொஞ்சம் உணர்வு வந்தது போலிருந்தது.*

***சாமி உன்னயக் கூப்புடுது வந்து கேளு வா***

***"என்ன வேணும் என்ன வேணும்"***

*என்று யாரும் எதிர்பார்க்காதபடி வேகமாக எழுந்தவள் வெது பலத்துடன் கருப்பனார் கோயிலை நோக்கி ஓடினாள். தரையில் பதிந்து தாகம் தீராமல் கிடந்த அரிவாளை எடுத்து "இந்தா எடுத்துக்கய்யா" என்று கூவியபடி தன் கழுத்தில் இறக்கினாள். இரத்தம் பீறிட்டு இருளில் தெறித்தது. அறுபட்ட கழுத்து துடிக்கக் கருப்பனார் காலடியில் பாவாத்தாள் தலையும் முண்டமும் கிடந்தன*[16] *என்று பாவாத்தாளின் இறை நம்பிக்கையை எடுத்துக் காட்டுகிறார் பெருமாள் முருகன்.*

*இதிலிருந்து மனிதர்க்கு மேல் ஒரு சக்தி உள்ளது என்பதும், அதன் மீது நம்பிக்கை வைத்தால் உரிய பலன் கிடைக்கும் என்ற விழுமியப் பண்பானது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.*

*காட்சி நம்பிக்கை விழுமியம்*

*மனித வாழ்வில் காலந்தோறும் நம்பிக்கை என்பது நிலை கொண்டுள்ளது. மனிதர்கள் தாங்கள் வழிபடும் இறைவனுடைய ஆயுதங்களையும், பசு, மயில், எருமை, பாம்பு போன்றவற்றை வாகனங்களாகவும் படைத்து வணங்குகின்றனர். இறைவனுக்குரிய பசு, மயில், எருமை, பாம்பு ஆகியவற்றைக் காணுகின்ற போது அவைகள் மதிக்கக் கூடியனவாகவும், வழிபடுவனவாகவும் உள்ளன. இத்தகு செயல்பாடு காட்சி சார்ந்த நம்பிக்கை விழுமியமாக உள்ளதை அறிய முடிகிறது. இதனை,*

*மூஞ்சுறுவைப் பற்றி குழந்தைகளுக்கு விளக்கிச் சொல்லி அவற்றின் பயத்தைப் போக்க அவள் முனைந்து கொண்டிருந்தாள். அவளது பேச்சில் முக்கியமாக சாமி, சாமி வாகனம் எனும் புனிதத்தை மீஞ்சுறுவின் மீது ஏற்றினாள்17 என்பதை அறிய முடிகிறது.*

*"மகாமுனி கதையில் வேலாத்தாள் மீது மகாமுனி வந்து சாமியாட்டம் ஆடுவதைப் பார்த்து பட்டறையின் முதலாளி நடுங்கினான். அப்போது வேலாத்தா தீம்பு வந்திருச்சு" என்று சொல்லவே, பட்டறை முதலாளி கீழே விழுந்து வணங்கி என்ன தீம்பு சாமி வந்திருச்சு" என்று கேட்கவே, பக்கத்தில் இருந்த பவளாயி பட்டறை முதலாளி காதில் ஏதோ சொன்னார். இதிலிருந்து "தீம்பு" என்ற புனிதம் ஒருவரது வாழ்க்கையில் வந்து விட்டால் அது தீமையை நோக்கிச் செல்வதாக பெருமாள் முருகள் காட்டிச் செல்கின்றார்.*

*வேலாத்தாள் குறித்து ஆடினாள். ஒரு நாளும் இல்லாத விதமாகக் கைகளை நெஞ்சுக்கு நேராக நீட்டிக் கொண்டாள். கையில் பிரம்பொன்றைப் பிடித்திருப்பது போல் இருந்தது அவளது பாவனை. ருதிப்பில் சேலை சிக்கித் தடுமாறி விழுந்து விடுவாளோ என்று அச்சமாக இருந்தது பற்களை அவள் கடிக்கும் சத்தம் தெளிவாகக் கேட்டது. என்னயவா சோதிக்கிற ?... என்று இழுத்துச் சிறிது நிறுத்தினார். அமைதி முகங்கள் அவள் வார்த்தைகளுக்காக காத்திருந்தன*[18]

*மனித வாழ்க்கையில் இறை வழிபாட்டு பொருட்களும் இறை குறித்தான வார்த்தைப் பதிவுகளும் நம்பிக்கை விழுமியங்களாகக் கொள்ளப் பெறுவதை மேற்குறித்த கதைகள் வாயிலாக உணரமுடிகிறது.*

**சிறுதெய்வ நம்பிக்கை**

*இயற்கைச் சக்திகளை வழிபாட்டு நிலைக்கு உயர்த்திய மனித இனம், தங்களைக் காக்கும் தெய்வங்களைச் சிறுதெய்வம், பெருந்தெய்வம் எனப் பகுத்து வழிபட்டது. சில தெய்வங்கள் கிராமங்களுக்கு உயிர்நாடியாக விளங்குகின்றன. சிறுதெய்வங்கள் நாட்டுப்புற தெய்வங்கள் என்றும் அழைக்கப்பெறும். சுங்க காலத்தில் சிறுதெய்வங்கள் நிலைபெற்றிருந்ததை,*

***மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்***
***கொடியோர்த் தெறூஉ மென்ப..***[19]
***கள்ளி நீழற் கடவுள் வாழ்த்தி***[20]
***தொன்றுறை கடவுள் சேர்ந்த பராரை***
***மன்றப் பெண்ணை***[21]

*எனவரும் பாடலடிகள் உணர்த்துகின்றன. இதிலிருந்து தெய்வம் உறையும் இடங்களாக, மன்றம், பொதியில், கள்ளி, பனைமரம் ஆகியன இடம்பெற்றிருந்தன என்பதை அறியமுடிகிறது. நாம பட்டி போட்டிருக்கற எடம் முனிப்பன் வேட்டைக்குப் போற தடம்யா.*

***பெரீ கவுண்டரு நெறையாத்தரம் சொல்லியிருக்காரு. நேர்லயே பாத்துட்டம் போ நாளைக்குப் பட்டியைத் தூக்கி வேற இடத்துல போட்டரோணும்***[22]

*என்று கூறுவதிலிருந்து முனியப்பனை குலதெய்வமாக வழிபட்ட பாங்கை அறிய முடிகிறது.*

*தெய்வங்கள் மனிதர்களைப் போல், அனைத்துச் செயல்பாடுகளையும் செய்யும் என்ற நம்பிக்கை விழுமியத்தைதக் காணமுடிகிறது. அதாவது சில தெய்வங்களுக்குச் சில நீர் நிலைகளில் தண்ணீர் அருந்தும் வழக்கம் உண்டு எனவும், அந்நீர் நிலைகளை அசுத்தப்படுத்தாமல் வைத்துக் கொள்ள வேண்டும் எனவும், தவறி அசுத்தப்படுத்திவிட்டால் அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டும் எனவும் நம்புகின்றனர்.*

**முடிவுகள்**

1. *மனித வாழ்கையில் விழுமியங்கள் காலந்தொறும் வளர்ந்த வந்துள்ளன.*
2. *விழுமியம் என்னும் சொல் தற்காலத்தில் ''மதிப்பு'' என்னும் சொல்லால் குறிக்கப்படுகின்றதைக் காணமுடிகின்றது.*
3. *மாதொருபாகன் புதினத்தல், உயிர்களுக்கு அடிப்படை ஆதாரமாக உள்ள உணவும், நீரும் இல்லாமல் போகுமோ? என்ற மனவருத்தம் சார்ந்த விழுமியப் பண்பு சுட்டப்பெற்றுள்ளது.*
4. *வேளாண்மைத்தொழில் செய்ய வேண்டியது மனிதனின் அடிப்படையான அறமாகக் கருதப்படுவதைக் கங்கணம் புதினம் வழி வெளிப்படுத்தப்பெற்றுள்ளது.*
5. *''நுங்கு'' சிறுகதையில் வரும் முருகேசனின் தந்தை தனி மனிதனாக இருந்த வாழ்க்கையின் பல பரிமானங்களையும், எதார்த்தங்களையும் அறிந்து வாழ்வை அதன் போக்கில் விடுத்து, வாழ்ந்து வரும் மனதராக படைக்கப்பட்டுள்ளார்*
6. *உனக்கு என்ன பேனுமய்யா " கதையில் கிராம மக்கள் தங்களுக்கு ஏதாவது நோய் வந்து விட்டால் அதனைத் தீர்த்து வைக்கும்படி கருப்பனாரிடம் வேண்டுவது சுட்டப்பெற்றுள்ளது.*
7. *மனித வாழ்க்கையில் இறை வழிபாட்டு பொருட்களும் இறை குறித்தான வார்த்தைப் பதிவுகளும் நம்பிக்கை விழுமியங்களாகக் கொள்ளப் பெறுவதும் பெருமாள் முருகன் சிறுகதைகள் வாயிலாக உணர்த்தபட்பெற்றுள்ளது.*

**சான்றெண்விளக்கம்**

1. *சரோஜினி, வாழ்வியல் விழுமியங்கள், ப.1*
2. *இரா.பாலகிருஷ்ண முதலியார், தமிழ் ஆங்கில அகராதி, ப.5*

*3. டாக்டர் சேதுமணி மணியன், தமிழ் நாவல்களில் மதிப்புகள். ப. 21*
*4. பெருமாள் முருகன், மாதொருபாகன், ப.64*
*5. ஈ.கோ. பாஸ்கரதாஸ், நிலைபேறுடைய மானுட மதிப்புகள், ப. 25*
*6. பெருமாள் முருகன், திருச்செங்கோடு, ப.18*
*7. பெருமாள் முருகன், கங்கனம், ப.174*
*8. மேலது, ப. 124*
*9. பெருமாள் முருகன், மாயம், ப.88*
*10. குறுந். பா. 212*
*11. குறள். 85*
*12. ஔவையார். வெற்றிவேற்கை. வரி.10*
*13. பெருமாள் முருகன், மாயம். ப.65*
*14. பெருமாள் முருகன் சிறுகதைகள், உனக்கு என்ன வேணுமய்யா?. ப.183*
*15. மேலவர்;, உனக்கு என்ன வேணுமய்யா?. ப.197*
*16. மேலவர்;; நீர் விளையாட்டு, ப.125*
*17. மேலவர்;;;. மகாமுனி, ப.426*
*18. குறுந்.பா. 87*
*19. புறம்.260.*
*20. நற்றிணை.பா.303.*
*21. பெருமாள் முருகன் , சிறுகதைகள , ப.303.*

**துணைநூற்பட்டியல்**

1. *பெருமாள் முருகன் சிறுகதைகள், காலச்சுவடு பதிப்பகம், முதல் பதிப்பு. 2016*
2. *இரா. பாலகிருஷ்ணன் முதலியார். தமிழ் ஆங்கில அகராதி, பாரி நிலையம், சென்னை, முதல் பதிப்பு. 1956*
3. *டாக்டர் சேதுமணி மணியன், தமிழ் நாவல்களில் மதிப்புகள்,*
4. *ஈ.கோ. பாஸ்கரதாஸ், நிலைபேறுடைய மானுட மதிப்புகள்,*
5. *ஔவையார். வெற்றிவேற்கை, மணிவாசகர் பதிபபகம். 1988*
6. *உ.வே. சாமிநாதய்யர், குறுந்தொகை மூலமும் உரையும். கழக வெளியீடு, 1969*
7. *உ.வே. சாமிநாதய்யர், புறநானூறு மூலமும், உரையும். சென்னை 1974*
8. *பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், நற்றிணை மூலமும் உரையும், சென்னை 1968*

## References

1. Perumal Murugan Short Stories, Kalachuvadu Publishing House, Nager Kovil, First Edition. 2016
2. Ira. Balakiruna etc. Tamil English Dictionary, Bari Station, Chennai, First Edition. 1956
3. Values in Dr. Setumani Maniyan’s Tamil Novels,
4. E.Co. Bhaskaradas, Stable Human Values,
5. Olavaiyar. Vetriverkai, Manivasakar Publishing House. 1988
6. U.V. Saminathaiyar, short source and text. Institute Publication, Chennai 1969
7. U.V. Speech by Saminathaiyar, Purananuru. Chennai 1974
8. Binnathur a. Narayanasamy Iyer, Naritan Source and Text, Chennai 1968